# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

**B.S. ஞானதேசிகன்**, M.P.,
தலைவர்

தேதி : 28-8-2012

## *தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்*
## *திரு. பி.எஸ். ஞானதேசிகன், MP அறிக்கை*

இன்று காலை பத்திரிகைகளில் தமிழக முதலமைச்சர், தி.மு.க. தலைவர் கலைஞர் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களின் கோரிக்கை இருந்தாலும், "இலங்கை நட்பு நாடு, ஆகவே அந்நாட்டின் ராணுவ வீரர்களுக்கு இந்தியாவில் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படும்" என்று மத்திய பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு. பள்ளம் ராஜூ பத்திரிகையாளர் சந்திப்பின் போது சொன்னதாக செய்தி வெளிவந்திருக்கிறது.

இலங்கை மட்டுமல்ல, உலகத்திலுள்ள பல நாடுகள் இந்திய ராணுவ பயிற்சி நிலையங்களில் பயிற்சி எடுப்பது என்பது சர்வதேச ஒப்பந்தம் மற்றும் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (SAARC) அடிப்படையில் ஏற்பட்ட ஒப்பந்தம். இதனடிப்படையில் தான் ராணுவ பயிற்சி அளிக்கப்படுகிறது.

கலை, கலாச்சாரம், கல்வி சம்மந்தப்பட்ட பரிவர்த்தனைகளும் இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் நடைபெறுகிறது. அதையொட்டி தெற்காசிய பிராந்திய நாடுகளின் (SAARC) நாடுகளின் ஒப்பந்த அடிப்படையில் இலங்கை வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஒன்பது ராணுவ வீரர்களுக்கு தாம்பரத்தில் பயிற்சி அளிக்கப்பட்டபோது, அவர்களை திருப்பி அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அந்த கோரிக்கையை முன்னெடுத்துச் சென்று டெல்லிக்கு நேரடியாக போய் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ஏ.கே. அந்தோணி அவர்களை சந்தித்து கோரிக்கையை வலியுறுத்தியதன் அடிப்படையில் தமிழக தலைவர்களுடைய எண்ணத்தை ஏற்று அந்த 9 பேரும் தமிழகத்திலிருந்து வேறு மாநிலத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

இந்த செய்தி வந்தவுடன், திரு. பள்ளம் ராஜூ அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சொன்னது என்ன என்பதை அறிய முற்பட்டேன். பொதுவாக இதுபோல நட்புறவு நாடுகளோடு ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்தியாவில் பயிற்சி அளிப்பது என்பது எப்போதும் நடந்து வருகிற வழக்கம்தான் என்பதும், சில நேரங்களில் மாநில அரசுகள் தெரிவிக்கின்ற, ஆட்சிசேபிக்கின்ற கருத்துக்களையும் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னதாக கூறினார். இந்த வரிகள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன.

ஆகவே குன்னூரில் இருக்கிற இரண்டு வீரர்களை திருப்பியனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்ததாக பொருள் அல்ல. இதற்கும் திரு. பள்ளம் ராஜூ அவர்களின் பத்திரிகை பேட்டிக்கும் சம்பந்தம் இல்லை. இதை நான் அவரிடமிருந்தே தெளிவு பெற்றேன். இந்த இரண்டு வீரர்களையும் தமிழகத்திலிருந்து திரும்பப் பெற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கேட்டுக் கொள்கிறது. மேலும் இது தொடர்பாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ஏ.கே. அந்தோணி அவர்களோடு நான் பேசுவேன்.

B.S. ...

**(B.S. ஞானதேசிகன், MP)**

"சத்தியமூர்த்தி பவன்" 40, திரு.வி.க. சாலை, சென்னை - 600 002
போன் : 28603945, 28601949, பேக்ஸ் : 28604243